**தமிழ் வருடாந்திர மாநாடு மெதடிஸ்ட் பெண்கள்**

**ஜெபம் மற்றும் உபவாசத்தின் நாள் (14-ஆம் ஜனவரி, 2017)**

---

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளே,

ஈடு இணையற்ற நமது ஆண்டவரும், ரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களின் வாழ்த்துக்கள்.

நாம் இந்த 2018-ஆம் ஆண்டை வரவேற்கும் நேரத்தில் நாம் அனைவரும் ஒன்று கூடிஜெபத்திலும், உபவாசத்திலும் திறப்பிலே நின்று நமது மாநாடு, நம் பெண்கள், நம் குடும்பங்கள், நம் தேசம், மற்றும் இந்த முழு உலகத்தின் தேவைகளுக்காகவும் ஜெபிப்போம்.

எரேமியா 29:12-13-ல், ***"அப்பொழுது நீங்கள் கூடிவந்து என்னை தொழுதுக்கொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்கு செவிக்கொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னை தேடினீர்களானால், என்னை தேடுகையில் கண்டுப்பிடிப்பீர்கள்"***, என்று சொல்லப்பட்டப்படி, நாம் மெதடிஸ்ட் பெண்களாக கீழ்கண்ட தேவைகளுக்காக உபவாசித்து ஜெபிப்போமே.

1. **குடும்பம்**
   அ. பெற்றோர்கள் ஜெபம் நிறைந்த பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, தங்கள் பிள்ளைகளுக்கும் பரிசுத்த வாழ்வையும், ஜெபத்தின் வல்லமையையும் கற்று கொடுக்க ஜெபிப்போம்.
   ஆ. ஆண்டவர் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை பெற்றுகொள்வதற்கு ஏற்ற விதமாய் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை மதிக்கவும் அவர்களுக்கு கீழ்படியவும் கற்று கொடுக்க ஜெபிப்போம்.
   இ. நமது அன்றாட தேவகளை தேவன்தாம் சந்திக்கிறார் என்று நம்ப கற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
   ஈ. யோசுவா 24:15 ***"நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்"*** என்று சொல்லப்பட்டபடி, குடும்பமாக தேவனை சேவிக்க ஜெபிப்போம்.

2. **சபை**
   அ. சபை மக்கள் அனைவரும் வேதத்தை கட்டாயம் படிக்க ஜெபிப்போம் ஏனெனில் ***"அவருடைய வார்த்தை ஜீவனும் வல்லமையுமுள்ளது"*** (எபி 4:12)
   ஆ. ஆண்டவருக்கு ஊழியம் செய்கிற சபையின் தலைவர்கள் அனைவரும் ஆவியின் கனிகளால் நிரப்பப்பட ஜெபிப்போம்.
   இ. சபை மக்கள் அனைவரும் எந்த ஊழியம் செய்தாலும் மனிதனுக்கென்று செய்யாமல் தேவனுக்கென்று செய்ய ஜெபிப்போம்.

3. **மாநாடு – போதகர்கள்**
அ. ஞானம் & வழிநடத்தல் – நமது TAC தலைவர், போதகர்கள் மற்றும் தலைவர்கள் அனைவரும் தேவனுடைய ஞானத்தினால் தொடர்ந்து வழி நடத்தப்படவும், அவர்கள் தேவனையே முழுவதுமாக சார்ந்து தாழ்மையாய் கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஜெபிப்போம்.
ஆ. தேவை – நமது போதகர்கள் அனைவரும் தங்கள் எல்லா தேவைகளையும் தேவன் சந்திப்பாரென்று விசுவாசத்தில் நடக்க ஜெபிப்போம்.
இ. உண்மைத்துவம் – நமது போதகர்கள் தேவனுக்கு உண்மையாய் நடந்து, அவருடைய சித்தத்தை தங்கள் வாழ்க்கையில் தேவன் நிறைவேற்ற அவருக்கு இடம் கொடுத்து, தம்முடைய ஜனங்களுக்கு நல்ல மேய்ப்பராய் ஊழியம் செய்ய வேண்டும் என்ற தாகத்தோடு ஊழியம் செய்ய ஜெபிப்போம்.
ஈ. சுகபெலன்
- வெவ்வேறு இடங்களுக்கு ஊழியத்திற்கென்று மாற்றலாகி அனுப்பப்பட்ட ஒவ்வொரு போதகரும் அவர் குடும்பமும் அந்தந்த சூழ்நிலைகளுக்கு சீக்கிரமாய் பழகிக்கொள்ள ஜெபிப்போம்.
- சபை அங்கத்தினர்கள் போதகர்களுக்கு நல்ல சூழலை அமைத்து தர உதவ ஜெபிப்போம்.
- போதகர்கள் நல்ல உடல் சுக பெலத்தோடு தொடர்ந்து தேவனுக்காய் ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

4. **தேசம்**
அ. வரவிருக்கும் தேர்தலுக்காக ஜெபிப்போம். மக்கள் தேவ ஞானத்தோடு தங்கள் தலைவர்களை தேர்வு செய்ய ஜெபிப்போம்.
ஆ. தெய்வீக ஞானத்தோடு ஆட்சி செய்து, தேசத்திற்கு சமாதானமும் சமவுரிமையையும் நிலைநாட்டும் நல்ல தலைவர்களை தேவன் எழுப்பும்படி ஜெபிப்போம்.
இ. ஞானமுள்ள, பகுத்தறியும், நல்ல விசுவாசம் உள்ள தலைவர்களை தேவன் நியமிக்க ஜெபிப்போம்.

அவர் பணியில்,

மார்கரெட் நெல்ஸன்

ஆவிக்குரிய ஜீவியம் ஒருங்கிணைப்பாளர்

TAC மெதடிஸ்ட் பெண்கள்